**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref | Google Scholar
SJIF Impact Factor 3.5| Multidisciplinary
DOI: https://doi.org/10.63300/kijts05sp062026.01
https://ngmtamil.in/

# Existential alienation of the individual and its reflection in the novel Kutramum Thandanayum

**Janani M[1*], Dr. Rajammal D[2],**
[1]PhD Research Scholar, Department of Tamil, PSG College of Arts & Science, Coimbatore- 641014.
[2]Research Guide, Assistant Professor, Department of Tamil,
PSG College of Arts & Science, Coimbatore- 641014.
[*]Corresponding Author EMail: jananimoorthytamizh@gmail.com | Mobile: 9597539723.

**Article Info**
Received on 27-June-2026, Revised on 29-June-2026, Accepted on 29-June-2026, Published on 01-July-2026

**Abstract:**
The World War subjected humanity to various crises, alienating individuals both from their labor and from themselves. Existentialism emerged as a response to this personal crisis, attempting to seek the meaning of life through the lens of death. While Existentialism sets aside external objects to raise questions concerning the inner self, Marxism employs the concept of alienation to critique socio-economic conditions. This article discusses the individual dilemmas presented by Existentialism and the evolution of Hegel's concept of 'Alienation'. Furthermore, it examines the theme of alienation as manifested in Kutramum Thandanayum by Fyodor Dostoevsky, a writer celebrated as a precursor to Existentialism.

***KEYWORDS:*** *Existentialism, Alienation, Dostoevsky, Hegel, Crime and Punishment.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

# இருத்தலியம் முன்வைக்கும் தனிமனித அந்நியமாதலும் குற்றமும் தண்டனையும் நாவலில் அதன் வெளிப்பாடும்

[1]**மூ. ஜனனி,** முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,

பூ. சா. கோ கலை அறிவியல் கல்லூரி, கோவை– 641014.

மின்னஞ்சல்: jananimoorthytamizh@gmail.com, அலைபேசி: 9597539723

[2]**முனைவர். து. ராஜம்மாள்,** உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,

பூ. சா. கோ கலை அறிவியல் கல்லூரி, கோவை– 641014.

**ஆய்வுச் சுருக்கம்**

உலகப் போரானது மனிதனைப் பல்வேறு நெருக்கடிகளுக்கு உள்ளாக்கியது. அவனை உழைப்பிலிருந்தும் தன்னிடமிருந்துமே அந்நியப்படுத்தியது. இத்தகைய தனிமனித நெருக்கடியின் காரணமாகத் தோற்றம் பெற்றதே இருத்தலியம். சாவை அடிப்படையாகக் கொண்டு வாழ்வின் அர்த்தத்தைத் தேட முயன்றது இருத்தலியம். புறப்பொருள்களை ஒதுக்கி விட்டு அகவயம் சார்ந்த கேள்விகளை இருத்தலியம் எழுப்ப மார்க்சியமோ சமூகப் பொருளாதார நிலைமைகளை விமர்சிக்க அந்நியமாதலைப் பயன்படுத்துகிறது. இக்கட்டுரை இருத்தலியம் முன்வைக்கும் தனிமனிதச் சிக்கலையும், ஹெகலின் 'அந்நியமாதல்' என்ற கருத்தாக்கத்தின் வளர்ச்சியையும் விவாதிக்கிறது. மேலும் இருத்தலியத்தின் முன்னோடியாகக் கொண்டாடப்படும் ஃபியோதர் தஸ்தயேவ்ஸ்கியின் குற்றமும் தண்டனையும் நாவலில் வெளிப்படும் அந்நியமாதலையும் ஆராய்கிறது.

**முன்னுரை**

மனிதனின் புறவயம் சார்ந்த நிகழ்வுகள் மேலோங்கி இருந்த காலகட்டத்தில் போருக்குப் பிறகான சூழலில் நெருக்கடியான மனிதனை முதன்மைப்படுத்தித் தோற்றம் பெற்றதே இருத்தலியம். இருத்தலியத்தின் முக்கியமான கூறான தனிமனித அந்நியமாதல் ஹெகலின் கருத்தாக்கத்திலிருந்து வளர்ச்சி பெற்ற போக்கினையும் குற்றமும் தண்டனையும் நாவலில் அந்நியமாதலின் வெளிப்பாட்டையும் இக்கட்டுரை ஆராய்கிறது.

**அறிவுவாதமும் இருத்தலியமும்**

முதல் உலகப்போரின் போது ஏற்பட்ட நெருக்கடியின் காரணமாகத் தோற்றம் பெற்றதே இருத்தலியம். முதலாளியச் சிந்தனைகள் மீதான நம்பிக்கையை அகற்றி அவநம்பிக்கையை இருத்தலியம் தோற்றுவித்தது. தனிநபரின் நெருக்கடியைப் பேசுவதே இருத்தலியத்தின் பொருள். இதை அறிஞர்கள் ‘ஆன்மீக கலாச்சார நெருக்கடி’ என்று அழைக்கின்றனர். கீர்கேகார்ட், ஹைடெக்கர், ப்யூபர், சார்த்தர், காம்யூ, கார்ல் யாஸ்பர்ஸ், கேப்ரியல் மார்ஸெல் ஆகியோர் முக்கியமான இருத்தலியலாளர்கள். மனித யுகமானது அறிவை மிகுதியாகப் பெற்றிருந்தபோதிலும் மனிதனைச் சொற்பமாக அறிந்திருக்கிறது என்றார் ஹைடெக்கர்.

“அசலான அர்த்தப்பூர்வமான வாழ்க்கை, கும்பல் சமுதாயம், அனாமதேயக் கூட்டத்தில் கரைந்துவிடுதல் என்பன தனிமனிதனுக்கும் சமுதாயத்துக்குமுள்ள பிரச்சனையின் வெளிப்பாடுகள் ஆகும்” (எஸ்.வி. ராஜதுரை, இருத்தலியமும் மார்க்ஸியமும், விடியல் பதிப்பகம், இரண்டாம் பதிப்பு,

2024, ப.402) என்று கூறும் இருத்தலியம் "எந்தப் பகுத்தறிவை, அறிவொளிச் சிந்தனையை, அறிவியலைக் கொண்டு பூர்ஷ்வா சமுதாயம் கட்டி எழுப்பப்பட்டதோ, அந்த அறிவொளியை, பகுத்தறிவை, அறிவியலை நிராகரிப்பதிலேயே தனிமனித சுதந்திரம் கைகூடும்"(மேலது, ப. 403) என்றும் கூறுகிறது. ஹெகலின் பகுத்தறிவுவாதத்திற்கு எதிராக கீர்கேகார்ட் 'உண்மை பற்றிய விழிப்புணர்வு அதிகரிக்க மனிதனுடைய கால வெளிக்கும் கடவுளுடைய கால வெளிக்கும் உள்ள வேறுபாடுகள் அதிகரித்து கையறுநிலைக்கு இட்டுச் செல்லும்' என்கிறார். மறுபுறம் நீட்சே அனைத்தின் மீதும் அவநம்பிக்கை கொண்டு நாத்திக மனிதத்துவத்தை வளர்த்தார். ஹுஸெர்ல் மானுட உணர்வுகளுக்கு வெளியே புறப்பொருள் எதுவும் இல்லை என்று கூறும் அகநிலைக் கருத்துமுதல்வாதி ஆகிவிட்டார். ஹைடெக்கர் மனிதனின் சுயத்தை உள்நோக்கிப் பார்க்க வேண்டும் என்றும் பகுத்தறிவு புறப்பொருள்களைப் பார்ப்பதைப் போலவே மனிதனின் அகத்தையும் பார்க்கிறது என்ற கருத்தை முன்வைத்தார்.

**தனிமனித முக்கியத்துவம்**

தனிமனிதனின் சுதந்திரம், அந்நியமாதல், அசலான அர்த்தப்பூர்வமான வாழ்க்கை குறித்து ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ளதாக இருத்தலியம் கூறுகிறது. இருத்தலியத்தன் தந்தை எனப்படும் கீர்கேகார்ட், "உலக ஆன்மா, முழுமுதல் கருத்து, தன்னைத்தானே அறிந்து கொள்வதற்கான, சுய உணர்வைப் பெறுவதற்கான அந்தப் பயணத்தின் கட்டங்களாக இயற்கையாகவும் வரலாறாகவும் தன்னைப் புலப்படுத்திக் கொள்கிறது, அதன் அறிவார்ந்த செயல்களின் விளைவுகளே அவை. அந்த உலக ஆன்மாவின் பயணத்துக்கான, அது சுய உணர்வு பெறுவதற்கான ஊடகமே தனிமனிதன் என்பதை, அவன் குடும்பம், சமுதாயம், உலக ஆன்மா இறுதியில் செயலுருக் கொள்ளும், தன்னிறைவு பெறும் அரசு ஆகிய முழுமைகளுக்குள் உட்கிரகிக்கப்படுவான் என்பதை, அதாவது, உலக ஆன்மாவின் அறிவார்ந்த செயல்பாடுகளைப் புரிந்து கொள்வதுதான் சுதந்திரம் என்பதை ஏற்க மறுத்து 'இறையாண்மை கொண்ட தனி மனிதனை (sovereign individual) நிறுவ விரும்பினார்" ( மேலது, ப. 405 ). அவர் அறிவியலின் துணை கொண்டு மனித உணர்வுகளை விளக்க முடியுமானால் நான் என்பதும் எனது தனித்துவம் என்பதும் என்ன என்ற கேள்வியை எழுப்புகிறார். மனிதன் மரணிப்பான் எனத் தெரிந்தும் அவன் எப்படி வாழப்போகிறான் என்ற கேள்வியை இருத்தலியம் எழுப்புகிறது. அதற்கு கீர்க்கேகார்ட் மனிதனை நம்பிக்கையே மரணத்திலிருந்து காப்பாற்றும் என்று அகவயம் சார்ந்த தீர்வை முன்வைக்கிறார். பகுத்தறிவை சிறிது நம்பும் பாஸ்காலும் இதனை ஆதரித்தார்.

**ஹெகலின் அந்நியமாதல்**

அந்நியமாதல் ஹெகலின் சமூகத் தத்துவக் கருத்தாக்கங்களில் ஒன்று. இதற்கு இருத்தலியமும் மார்க்சியமும் வெவ்வேறு விளக்கங்களைத் தருகின்றன. மனிதனின் மனோநிலையை விளக்க இருத்தலியம் அந்நியமாதலைப் பயன்படுத்த மார்க்சியமோ சமூகப் பொருளாதார நிலைமைகளை விமர்சிக்க அந்நியமாதலைப் பயன்படுத்துகிறது. 'இருத்தலியம் அந்நியமாதலைப் பொதுவான மானுட நிலையாகப் பார்க்கிறது'.

Copyright © Author(s), Issue DOI: https://doi.org/10.63300/kijts05sp052026 

ஹெகல் மனிதனுக்கு சுய உணர்வு தானாக ஏற்படுவதில்லை என்றும் அது சமூகம், வரலாற்று ரீதியாக உருவாக்கப்படுகிறது என்றும் கருதினார். ஹெகலின் மறைவிற்குப் பிறகு வலதுசாரி, இடதுசாரி ஹெகலியர்கள் என்ற பிளவு ஏற்பட்டது.

“அறிவுக்கும், யதார்த்த நிலைக்குமிருந்த முரண்பாடு நீங்கி இரண்டுக்குமிடையே இசைவிணக்கம் ஏற்பட்டுவிட்டது என்று ஹெகல் கூறியது அபத்தமானது, ஏற்கப்பட முடியாதது என்று ‘இடதுசாரி’ ஹெகலியர்கள் கூறினார்” (மேலது, ப. 408). சமூகத்தில் பிரிவினை இருந்த காலம் அது. ஹெகலியத்தை மார்க்ஸூம் கீர்கேகார்டும் வெவ்வேறு வகைகளில் அணுகினர். ஹெகல் மனிதன் அந்நியமாகி சுய அந்நியமாதலைக் கடந்து தன்னைத்தானே கண்டறிகிறான் என்றார். சமூக உலகில் இருப்பதன் மூலமே அந்நியமாதலைக் கடந்து செல்லும் வழி என்றார். “மிகத் தொன்மைக்கால மானுட சமுதாயங்களில் மனிதர்களுக்கிடையே ஒற்றுமையும் இசைவிணக்கமும் இருந்தன. வரலாற்றின் இந்த தொடக்கக் கட்டம், பண்டைக் கிரேக்க சமூக அமைப்பான ‘போலிஸ்’(polis) என்பதில் உச்சகட்டத்தை அடைந்தது. அந்தப் பண்டைக் கிரேக்க சமூக அமைப்பு உடைந்த பிறகு மிக நீண்ட காலம் மானுட குலம் பிரிவினைகளுக்கு உள்ளாகிறது; சிதறுபடுகிறது; அந்நியமாதலுக்கு உள்ளாகிறது; ஆனால், இவற்றால் ஏற்படும் விளைவுகள் முற்றிலும் எதிர்மறைத்தன்மை வாய்ந்தவை அல்ல. இந்த இயக்கப்போக்கின் ஊடாகத்தான் மனிதர்களின் தனித்துவம், அகத்தன்மை (தன்னிலை), சுதந்திரம் ஆகியவை வளர்ச்சி பெற்று செழுமைப்படுகின்றன. இறுதியாக பிரெஞ்சுப் புரட்சிக்குப் பிறகு தோன்றிய நவீன தாராளவாத அரசியல், சுதந்திரமான, சுய உணர்வுள்ள தனிமனிதர்கள் இறுதியில் இயற்கை உலகுடனும் சமுதாய உலகுடனும் இசைவிணக்கம் கொள்கின்றனர். ஆக, ஹெகலைப் பொருத்தவரை சமூக அந்நியமாதல், ஆன்மீக அந்நியமாதல் (அதாவது ‘அந்நியமாதல்’ பற்றிய உணர்வு) ஆகியன ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டவை ஆகும்” (மேலது, ப. 410). ஹெகல் பிரிவினை கடக்கப்பட்டு விட்டதாகக் கூறியதை இருத்தலியமும் மார்க்சியமும் ஏற்க மறுத்தது.

**மார்க்சியப் பார்வையில் அந்நியமாதல்**

ஹெகலைப் போல மார்க்ஸூம் வரலாற்று வளர்ச்சியை நம்பினாலும் ஆன்மாவின் வளர்ச்சி என்பதை மறுத்து பொருள்முதல்வாதக் கோட்பாட்டை உருவாக்கினார். சமூக, பொருளாதார அடிப்படையை மாற்றும் போதே அந்நியமாதலைக் கடக்க முடியும் என்றார். மனிதர்கள் தங்களிடமிருந்தும் உலகத்திடமிருந்தும் அந்நியப்படுவதை ஹைடெக்கரும் ‘சமுதாயத்தில் நமக்கு வழங்கப்பட்டுள்ள பாத்திரத்தின் வழி கண்டடைதல்’ என்பதை மறுக்கிறார். அவர் அதை ‘வீழ்ச்சி’ என்றும் தன்னைத்தானே இழத்தல் என்றும் குறிப்பிடுகிறார்.

சமுதாய மாற்றம் தனிநபரின் சுதந்திரத்திற்கு வழிவகுக்கும் என்பதை சார்த்தர் மறுத்தார். தனிநபரின் துணையின்றி அது சாத்தியமில்லை என்றார். இன்றைய நவீன யுகத்தில் நாம் ஏற்கனவே ஒரு சமூகப் பாத்திரம் கொடுக்கப்பட்ட நிலைமாறி நாம் பாத்திரத்தைத் தேர்ந்தெடுக்கும் உரிமை இருக்கிறது. நவீன சமுதாயம் தனித்துவத்தை அழித்து கும்பல் சார்ந்த சமுதாயத்தை உருவாக்குகிறது என்பதை மார்க்ஸ் உணர்ந்திருந்தார். எனவேதான் முதலாளித்துவத்திற்கு முந்தைய

சமுதாயங்களிலும் சாதி, மத ரீதியான அந்நிமாக்கல் இருந்து வந்துள்ளதை மறுக்க முடியாது இதையே எஸ். வி. ராஜதுரை “உண்மையில் இந்த நெடுங்காலப் பாரம்பரியம் – சமயம், சடங்கு, சாதி அமைப்பு – மானுட அந்நியமாதலின் மிகக் கடுமையான வடிவமாகும். ஏனெனில் இது அந்நியமாதல் பற்றிய உணர்விலிருந்தே மனிதனை அந்நியமாக்குகிற ஒரு வடிவம். இத்தகைய கடுமையான கலாச்சார அந்நியமாதலுக்கு இரையான உழைக்கும் மக்களே – குறிப்பாக கிராமப்புரத்து உழைக்கும் மக்களே. ‘ஜனநாயகம்’, ‘பேச்சு சுதந்திரம்’, ‘சிந்தனைச் சுதந்திரம்’ போன்ற நகர்ப்புற ‘மேட்டுக்குடி’ வர்க்கக் கருத்தாக்கங்கள் இவர்களைப் பொறுத்தவரை பொருளற்றவை” (எஸ். வி. ராஜதுரை, அந்நியமாதல், க்ரியா, இரண்டாம் பதிப்பு, 2022, ப. 27) என்கிறார்.

**தஸ்தயேவ்ஸ்கியும் இருத்தலியமும்**

இருபதாம் நூற்றாண்டின் இருத்தலியவாதத்தின் முன்னோடியாகக் கொண்டாடப்படுபவர் தஸ்தயேவ்ஸ்கி. எங்கோ தொலைவில் உள்ள ரஷ்யாவில் எழுத்தாளனாகப் பரிணமித்தவன் நூற்றாண்டுகள் கடந்தும் உலகம் முழுவதும் வாசிக்கப்படுவதன் காரணம் என்ன? தனது சொந்த வாழ்க்கையில் இளம் வயதில் தாயை இழந்து, சொந்த வேலையாட்களே தந்தையைக் கொன்றுவிட காக்காய் வலிப்பு நோய்க்கு ஆட்பட்டு, போர்வையும் எழுதக் காகிதங்களும் கூட வாங்க முடியாத வறுமையில் தவித்து, சைபீரியச் சிறையில் மரணத்தை நேருக்கு நேர் கண்டு, கடைசி நொடியில் உயிர் பிழைத்து நாடு திரும்பி, சூதாடி, மனமுறிவுக்கு உள்ளாகி என வாழ்க்கை முழுதும் கசப்பினை அனுபவித்த தஸ்தயேவ்ஸ்கி மனிதர்களின் மீது கருணை செலுத்தியது தான். 1866 - இல் அவர் படைத்த நாவலே குற்றமும் தண்டனையும்.

**குற்றமும் தண்டனையும் நாவலில் அந்நியமாதல்**

தான் வாழ்ந்த காலத்தில் படிக்காதவர்களே குற்றச் செயல்களைச் செய்து வந்தனர் என்ற பொதுப் போக்கிற்கு மாறாக படித்த இளைஞன் ஏன் ஒரு கொலை செய்ய வேண்டும்? கொலை செய்த பிறகு அவனால் ஏன் இயல்பாகச் செயல்பட முடியவில்லை? அவன் மீட்சிக்கான கதவு எங்கே திறக்கிறது? என்பதைப் பல்வேறு முரண்களின் வழி கடத்திச் செல்லும் நாவல் குற்றமும் தண்டனையும்.

கதையின் முதல் அத்தியாயத்திலேயே உலகில் இருந்து அந்நியமாக்கப்பட்ட நாயகன் ரஸ்கோல்னிகோவின் மனநிலையைச் சித்தரிக்கிறார் தஸ்தயேவ்ஸ்கி. ".... சிறிது காலமாக எதிலும் முழுமை காண முடியாத இனந்தெரியாத எரிச்சலுடனும் பதற்றத்துடனும் தான் அவன் இருந்துகொண்டிருந்தான்.... மற்றவர்களிடமிருந்து தன்னை முழுமையாகத் துண்டித்துக் கொண்டு தனக்குள்ளாகவே ஒடுங்கிப் போயிருந்த அவன், எவருடனும் தொடர்பு கொள்வதற்கு விருப்பமற்றவனாக ஒரு கூட்டுக்குள் தன்னைச் சுருக்கி கொண்டவனாகவே நடமாடி வந்தான்" (ஃபியோதர் தஸ்தயேவ்ஸ்கி, குற்றமும் தண்டனையும், தமிழில் : எம். ஏ. சுசீலா, நற்றிணை பதிப்பகம், இரண்டாம் பதிப்பு, 2017, பக். 13-14) என்பது வறுமையின் காரணமாக மனச்சிதைவுக்கு உள்ளாகும் மனிதனைச் சித்தரிக்கிறது. இதன் காரணமாக வட்டிக்குப் பணம் தரும் கிழவியைக் கொன்று பணத்தைத் திருடி விடலாம் என்ற எண்ணம் தோன்ற "ஓ... கடவுளே! எவ்வளவு கேவலமான

Copyright © Author(s), Issue DOI: https://doi.org/10.63300/kijts05sp052026 

அருவருப்பான செயல்கள் இவையெல்லாம்! இதை என்னால் எப்படிச் செய்ய முடியும்? இல்லை ... இது அபத்தமானது... கேவலமானது" (மேலது, ப. 28) என்று தன்மீதே சுயவெறுப்பு அடைந்து தன் வாழ்நாளில் ஒருபோதும் சென்றிராத சாராயக் கடைக்குச் செல்கிறான்.

அங்கு மர்மெலாதோவ் என்ற பாத்திரத்தை அறிமுகப்படுத்துகிறார் தஸ்தயேவ்ஸ்கி. குடிப்பதை மட்டுமே முழுநேர வேலையாகக் கொண்டிருக்கும் அவன் தனது மகள் விலைமாதாகிப் போனாள் என்றும் வேலை இழந்த பிறகு குடிப்பதற்காகத் தனது மனைவியின் காலுறைகளைக் கூட விற்றதாகவும் கூறி தனது அவல நிலையைத் தானே ஏற்றுக் கொண்டு வாழ்பவனாக உள்ளான்.

இந்நிலையில் ரஸ்கோல்னிகோவின் மனநிலையில் தாயின் கடிதம் மேலும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. கடனாகப் பணம் பெற்று அவனுக்கு அனுப்புவதாகவும், அவனுடைய சகோதரி வேலை செய்த இடத்தில் ஒருவர் அவள் மீது தவறான கண்ணோட்டத்தை ஏற்படுத்திக் கொண்டு பின்னர் அதற்கு வருந்தியதாகவும், இவை அனைத்தையும் அறிந்த ஒருவர் அவளைத் திருமணம் செய்து கொள்ள முன் வந்ததாகவும், அதன் பிறகு அவன் படிப்புச் செலவு பற்றிய கவலை இருக்காது என்று தனது தாய் எழுதியிருந்தது அவனுக்கு எரிச்சலை உண்டாக்கியது. மனச்சோர்வுடன் அவன் வெளியே செல்லும்போது எதிர்ப்படும் ஒரு பெண்ணைக் காப்பாற்றுகிறான் ரஸ்கோல்னிகோவ். இவ்வளவு இளகிய மனம் கொண்டவன் தான் வட்டிக்குப் பணம் கொடுக்கும் கிழவியையும், கருவுற்று இருக்கும் அவள் சகோதரியையும் கொன்று விடுகிறான். ஒரு அதிகாரியிடம் பேசுகையில்
“...முதல் பிரிவினர், இயற்கையாகவே அமைதியும், நிதானமும் கொண்டவர்கள், மரபு வழிகளில் ஊன்றிப் போனவர்கள்; எதற்கும் பணிந்து போகிறவர்கள். சொல்லப் போனால், இப்படிப்பட்ட குணங்களைக் கொண்டவர்கள் பணிந்து போய்த்தானாக வேண்டும்! வேறு வழி இல்லை. அதுதான் அவர்களது விதி. அப்படிச் செய்வதை அவர்கள் கேவலமாக நினைப்பதுமில்லை! இரண்டாவது பிரிவினர், சட்டங்களை உடைப்பவர்கள். அப்படிப்பட்ட தூண்டுதல்களையாவது பெற்றிருப்பவர்கள். இப்படிப்பட்ட மனிதர்களின் நோக்கங்கள் காலத்துக்கும் இடத்துக்கும் தக்கபடி மாறக்கூடியவை. பலதரப்பட்டவை. பரந்துபட்ட வெவ்வேறான சூழல்களில் இதுவரை நடந்து வருவதை வைத்துப் பார்க்கும் போது, காலங்காலமாக எவையெல்லாம் புனிதமானவை, உயர்ந்தவை, சிறந்தவை என்று சொல்லப்பட்டு வருகின்றனவோ அவற்றைத் தகர்ப்பதுதான் அவர்களின் நோக்கம் என்று படுகிறது” (மேலது, ப.521) எனத் தனது செயலை நியாயப்படுத்துகிறான். பல்வேறு முரண்களுக்கு இடையில், மனசாட்சியின் உறுத்தலுக்கு இடையில் ரஸ்கோல்னிகோவ் நாடிச் சென்று மன்னிப்புக் கேட்பது, அவனது மீட்சிக்கு உதவும் கருணை சோனியாவிடமே உள்ளது. பணத்திற்காகக் கிழவியைக் கொண்றிருந்தால், தான் மகிழ்ச்சியாக இருந்திருக்க வேண்டும் என்றும் அதை சோனியா புரிந்து கொள்ள வேண்டும் என்று கூறும் ரஸ்கோல்னிகோவ் “நான் உன்னைக் கேட்டுக் கொள்வதெல்லாம் நீ ஒருநாளும் என்னைத் தனியே விட்டுப் போய்விடக் கூடாதென்பது மட்டும் தான்” (மேலது, பக். 810 – 811) என்று அவளின் அன்பை நாடுகிறான். இறுதியில் குற்றத்தை ஒப்புக்கொண்டு அவன் சைபீரியாவிற்குச் செல்லும்

போதும் சோனியா அவனை தொடர்கிறாள். அவனோடு பயணிக்கிறாள். புதிய ஏற்பாடு அவன் தலையணைக்கடியில் இருக்கிறது. அவன் அதை பிரித்துப் பார்க்கவில்லை என்ற போதும்!

இக்கதையின் வழி தஸ்தயேவ்ஸ்கி பொருளாதார, சமூக நெருக்கடியின் காரணமாக நிகழும் மானுட அந்நியமாதலை வெளிப்படுத்திய போதிலும் தனிமனிதன் மீண்டும் சமூகத்தின் அங்கமாகத் திரும்ப வேண்டும் என்பதை அவனது மீட்சிக்கான வழியாக அன்பை நிறுத்துவதன் வழி அறிய முடிகிறது.

**முடிவுரை**

போரின் போது ஏற்பட்ட நெருக்கடியின் காரணமாகச் சாவை மையமிட்டு வாழ்வை நோக்கும் பார்வையில் தோன்றிய தத்துவமே இருத்தலியம். கீர்கேகார்ட், ஹைடெக்கர், ப்யூபர், சார்த்தர், காம்யூ, கார்ல் யாஸ்பர்ஸ், கேப்ரியல் மார்ஸெல் ஆகியோர் முக்கியமான இருத்தலியலாளர்கள். இருத்தலியத்தின் தந்தை எனப்படும் கீர்கேகார்ட் மனிதனை நம்பிக்கையே மரணத்திலிருந்து காப்பாற்றும் என்று அகவயம் சார்ந்த கருத்தை முன்வைக்கிறார். ஹெகலோ அந்நியமாதலைச் சமூகத் தத்துவ கருத்தாக்கங்களில் ஒன்றாக முன்வைக்கிறார். இருத்தலியம் மனிதனின் மனோநிலை சார்ந்ததாகவும் மார்க்சியம் சமூகப் பொருளாதார நிலைமைகளை விமர்சிக்கவும் அந்நியமாதலைப் பயன்படுத்துகிறது. ஹெகலைப் போல வரலாற்று வளர்ச்சியை மார்க்ஸ் நம்பினாலும் ஆன்மாவின் வளர்ச்சி என்பதை மறுத்துப் பொருள்முதல்வாதக் கோட்பாட்டை உருவாக்கினார். தனிநபரின் துணையின்றி சமுதாய மாற்றம் சாத்தியமில்லை என்றார் சார்த்தார். தஸ்தயேவ்ஸ்கியின் குற்றமும் தண்டனையும் நாவலின் நாயகனான ரஸ்கோல்னிகோவ் தனது வறுமையினாலும் தான் வாழ்ந்த நகரத்தின் நெருக்கடி சூழலுக்கும் உட்பட்டே சமுதாயத்திலிருந்து அந்நியப்படுகிறான். தான் புரிந்த குற்றத்தின் வழி வந்த பணத்தைச் செலவு செய்ய முடியாமல் மனசாட்சியின் உறுத்தலுக்கு ஆட்பட்டு இறுதியில் விலை மாதுவாய் அந்நியப்பட்டு நிற்கும் சோனியாவின் அன்பின் வழியே மீள்கிறான்.

**துணைநூற்பட்டியல்**

[1]. எஸ்.வி. ராஜதுரை, இருத்தலியமும் மார்க்ஸியமும், விடியல் பதிப்பகம், இரண்டாம் பதிப்பு, 2024.

[2]. எஸ். வி. ராஜதுரை, அந்நியமாதல், க்ரியா, இரண்டாம் பதிப்பு, 2022

[3]. ஃபியோதர் தஸ்தயேவ்ஸ்கி, குற்றமும் தண்டனையும், தமிழில் : எம். ஏ. சுசீலா, நற்றிணை பதிப்பகம், இரண்டாம் பதிப்பு, 2017.

[4]. தஸ்தயேவ்ஸ்கி 200 ஆவது ஆண்டு சிறப்பிதழ், கனலி, ஜனவரி 2023.

[5]. Linda Ivanits, Dostoevsky and the Russian People, Cambridge University Press,2008.